## அல்லாஹ்வின் கட்டளை

لٰكِنِ الَّذِيْنَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ جَنّٰتٌ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا نُزُلًا مِّنْ عِنْدِ اللّٰهِ ؕ وَمَا عِنْدَ اللّٰهِ خَيْرٌ لِّلْاَبْرَارِ ﴿۱۹۹﴾

ஆனால் இறைபக்தியை கைக் கொள்கிறவர்களுக்கு கீழே ஆறுகள் ஓடுகின்ற தோட்டங்கள் உள்ளன. அவர்கள் அவற்றில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பர். (இது) அல்லாஹ்விடமிருந்துள்ள விருந்தோம்புதலாகும். அல்லாஹ்விடத்துள்ளது நல்லோர்க்கு மிகச் சிறந்தது. (3:199)


بسم اللہ الرحمن الرحیم — نحمدہ ونصلی علی رسولہ الکریم — وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 20

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

20 ரம்ஜான் 1441 ஹிஜ்ரி கமரி 14 ஹிஜ்ரத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

14 மே 2020


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நல்லொழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது எனும் கொள்கையில் எந்த அறிஞர்கள் உள்ளனரோ அவர்கள் தவற்றில் இருக்கின்றனர். நாம் பார்க்கின்றோம், சில அரசு ஊழியர்கள் லஞ்சம் வாங்குகின்றனர். அவர்கள் உண்மையான தவ்பா செய்துவிட்ட பின்னர் அவர்களுக்கு எவராவது தங்க மலையையே கொடுத்தாலும் அதனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

## நல்லொழுக்கத்தில் மாற்றத்தை, முயற்சி மற்றும் துஆவினால் செய்வது சாத்தியமாகும்

எப்போதுவரை மனிதன் முயற்சி செய்வதில்லையோ, துஆவிலிருந்து வேலை வாங்குவதில்லையோ, உள்ளத்தில் ஏற்படும் அந்த அழுத்தம் நீங்காது.

அல்லாஹ் கூறுகின்றான்: இன்னல்லாஹ...... (அர்ரஅது:12) அதாவது இறைவன் சமுதாயத்தின் மீது வரக்கூடிய ஒவ்வொரு வகையான துன்பத்தையும் சோதனையையும் அந்த சமுதாயம் அதனை நீக்குவதற்கு முயற்சி செய்யாதவரை நீக்குவதில்லை. இது அல்லாஹ்வின் ஒரு மாறாத சுன்னத்தாகும். எவ்வாறெனில் கூறியுள்ளான்: வலன்...... (அல் அஹ்ஸாப்: 63) எனவே நமது ஜமாஅத்தாக இருப்பினும் அல்லது யாராக இருப்பினும் அவர்கள், அக்லாக்கில் மாற்றத்தை இவ்விதமாக செய்யமுடியும். முயற்சி மற்றும் துஆவினால் பணியாற்றுங்கள். இல்லையென்றால் சாத்தியம் இல்லை.

### நல்லொழுக்கத்தின் மாற்றம் தொடர்பான இரண்டு கருத்துக்கள்

அக்லாக்கின் மாற்றம் பற்றி அறிஞர்களின் இரண்டு கருத்துக்கள் உள்ளன. முதல் பிரிவினர் யாரென்றால், மனிதன் அக்லாக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்பக்கூடியவர்கள் ஆவர். இரண்டாவது பிரிவினர் யாரென்றால், அவனுக்கு அதற்கு ஆற்றல் கிடையாது என நம்பக்கூடியவர்கள் ஆவர்.

அசல் விஷயம் என்னவென்றால் அசட்டையும் சோம்பலும் இல்லாமல் கை, கால்களை அசைத்தால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். எனக்கு இந்த இடத்தில் ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது; கூறுகின்றனர். யூனானின் பிரசித்திபெற்ற ஞானியாகிய அஃப்லாத்தூனிடம் ஒரு மனிதர் வந்தார். வாசலில் நின்றுகொண்டு உள்ளே தகவல் தெரிவித்தார். அஃப்லாத்தூனின் வழக்கம் என்னவென்றால், அவர் வருபவரின் அங்க அடையாளங்களையும் முகபாவனைகளையும் அறியாதவரை உள்ளே வர அனுமதிக்காமல் இருந்து வந்தார். மேலும் அவர், குறிப்பிட்ட நபர் எப்படிப்பட்டவராக இருக்கின்றார், எப்படிப்பட்டவராக இல்லை என்பதை அனுமானித்து அறிந்து கொள்பவராக இருந்து வந்தார். ஊழியர் வந்து அந்த நபரின் அங்க அடையாளங்களை வழக்கம்போல் கூறினார். அந்த நபரிடம், உங்களிடம் நிறைய தீய ஒழுக்கங்கள் உள்ளன. நான் சந்திக்க விரும்பவில்லையென கூறிவிடுமாறு அஃப்லாத்தூன் பதிலளித்தார். அந்த நபர் அஃப்லாத்தூனின் இந்த பதிலைக் கேட்டபோது ஊழியரிடம் கூறினார், நீங்கள் என்ன கூறினீர்களோ அது சரிதான்.

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**

ஆனால் நான் எனது தீய ஒழுக்கங்களை ஒழித்து சீர்திருத்தம் செய்துகோண்டேன் என நீங்கள் சென்று கூறுங்கள். இதற்கு அஃப்லாத்தூன் கூறினார். ஆம் இதற்கு வாய்ப்புள்ளது. இவ்வாறாக அவரை உள்ளே அழைத்தார். மிகுந்த மதிப்பு மற்றும் மரியாதையுடன் அவரைச் சந்தித்தார். அக்லாக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது எனும் கொள்கையில் எந்த அறிஞர்கள் உள்ளனரோ அவர்கள் தவற்றில் இருக்கின்றனர். நாம் பார்க்கின்றோம், சில அரசு ஊழியர்கள் லஞ்சம் வாங்குகின்றனர். அவர்கள் உண்மையான தவ்பா செய்துவிட்ட பின்னர் அவர்களுக்கு எவராவது தங்க மலையையே கொடுத்தாலும் அதனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. .

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 118,119 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## காதியான் தாருல் அமானில் தேசிய இஜ்திமாக்களுக்கான தேதி அறிவிப்பு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் இந்தியாவின் கிளை அமைப்புகளின் (மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ்) தேசிய இஜ்திமாக்களை 16,17,18 அக்டோபர் 2020 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள்.

கிளை அமைப்பின் உறுப்பினர்கள் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறும் இந்த இஜ்திமாக்களில் பங்கு பெற இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம். இந்த இஜ்திமாக்கள் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த வழியாக இருக்கின்றது.


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இன்றைய நாட்களில் துஆக்களின் மீது, துஆக்களின் மீது, துஆக்களின் மீது அதிகம் அழுத்தம் கொடுங்கள். அல்லாஹ் ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரையும் மற்றும் ஒட்டுமொத்த ஜமாஅத்தையும் எல்லா வகையிலும் தனது பாதுகாப்பில் வைப்பானாக**

**தொற்று நோயின் நாட்களில் துஆக்கள் செய்வதுடன் தற்காப்பு நடவடிக்கை மேற்கொள்வதன் பக்கம் வழிகாட்டல்**

**கிலாஃபத்துடன் உண்மையான அன்பு கொண்டிருந்த, முழுமையாக கட்டுப்பட்டு நடக்கக்கூடிய, அல்லாஹ்விடம் செய்த ஒவ்வொரு உடன்படிக்கையையும் நிறைவேற்றிய, பாதுகாப்பு துறையில் பணியாற்றிய இயக்கத்தின் தொண்டரான மதிப்பிற்குரிய நாஸிர் அஹ்மது சயீது சாஹிப் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். ஹுஸூர் அவர்கள் அன்னாரின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று இந்த மக்கள் ஷஹீது ஆவார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 ஏப்ரல் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **10 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

தற்காலத்தில் கொரோனா தொற்று நோயின் காரணத்தால் உலகத்தில் நம்மவரும் சரி அந்நியரும் சரி மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தமது அன்புக்குரியவர்கள், நேசத்துக்குரியவர்கள், நெருங்கிய உறவினர்களுக்கு வந்த இந்த நோய் அல்லது வேறு ஏதாவது நோயினால் தற்போது பெரும் துன்பம் ஏற்படுகிறது எனில் நம்மக்கள் தமது கடிதத்தில் தமது துன்பங்களை வெளிப்படுத்துகின்றனர்.

இன்னும் சில நோயாளிகளிடம் கூட அவர் பலவீனமான உடல்நிலை கொண்டவர் எனில் இந்த நோயின் தாக்கம் ஏற்பட்டு விடுமோ என்ற ஒரு துன்பத்தில் உலகம் உழன்று கொண்டிருக்கிறது. 'என்ன நடந்தது? என்று புரியவில்லை அல்லது என்ன நடக்கிறது? என்றும் புரியவில்லை' என்று ஒரு முரப்பி சாஹிப் எழுதுகிறார். அவர் கூறும் விஷயம் சரிதான். உண்மை என்னவெனில் ஒன்றும் தெரியவில்லை. என்ன நடக்கிறது? என்பது தெரியவில்லை.

அல்லாஹ் திருக்குர்ஆனிலும் இது குறித்துக் கூறுகிறான். உலகின் நிலைமைகள் மற்றும் நமது நிலைமைகள் குறித்து கூறுகிறான்: வகாலல் இன்ஸானு மாலஹா – இதற்கு இப்போது என்ன ஆகிவிட்டது? என்று மனிதன் கூறுவான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பிப்ரவரி 1920 கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்பு, தொற்று நோய்கள் மற்றும் சோதனைகளைக் குறிப்பிட்டவாறு சுருக்கமாக விளக்கிக் கூறியுள்ளார்கள்: முன்னரும் இவ்வாறான தொற்று நோய்களின் ஆபத்துகள் வந்ததுதான். ஆனால் இப்போது காலம் எத்தகையது எனில் சோதனைகளின் வாசல் திறக்கப்பட்டுள்ளது.

(குத்பாத்தே மஹ்மூது, தொகுதி 6 பக்கம் 387 குத்பா ஜுமுஆ 6 பிப்ரவரி 1920)

நானும் பல வருடங்களாகக் கூறி வருகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு அன்னார் உலகை தொற்று நோய்கள் வானத்து சோதனைகள் குறித்து எச்சரித்த பிறகு உலகில் புயல்களும், பூகம்பங்களும், தொற்று நோய்களும் மிகவும் அதிகரித்து விட்டன. மனிதனுக்கு பொதுவாக இந்த ஆபத்துகளும் தொற்றுநோய்களும் எச்சரிப்பதற்காக வருகின்றன. உங்களைப் படைத்தவனின் உரிமையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வின் படைப்பினங்களின் உரிமையை நிறைவேற்றுங்கள் என்று கூறுகின்றன. இந்த நிலையில் நாமும் இறைவன் பக்கம் குனிய வேண்டும். உலகையும் எச்சரிக்க வேண்டும். சில நோய்கள் அல்லது தொற்று நோய்கள், புயல்கள் எத்தகையவை எனில் இயற்கையான முறையில் அதன் தாக்கம் ஒவ்வொருவரின் மீதும் படுகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சில சோதனைகளுக்கும் நமக்கும் தொடர்பில்லை என்பது சரிதான். ஆனால் நாம் எந்த உலகில் வசிக்கிறோமோ அங்குள்ள தொற்றுநோய் போன்றவைகளில் ஓரளவுக்கு நமக்கு பங்கு பெற வேண்டியது (அதன் பாதிப்பு) ஏற்படுகிறது. அதில் நாமும் பங்கு பெறுகின்றோம் (பாதிக்கப்படுகிறோம்). இறை இயக்கங்கள் அதிலிருந்து முற்றிலும் பாதுகாக்கப்படும் என்பதன்று. ஏனெனில் அது இறைத் திட்டங்களுக்கு மாற்றமானது.

(குத்பாத்தே மஹ்மூது, தொகுதி 6 பக்கம் 387,388 குத்பா ஜுமுஆ 6 பிப்ரவரி 1920)

ஆனால் நம்பிக்கை கொண்டவர் அதுபோன்ற பிரச்சனைகளின்போது இறைவன் பக்கம் குனிந்தவாறு அவனது நன்றியுள்ள அடியார் ஆகியவாறு விழுகின்றனர்.

ஆகவே நான் ஏற்கனவே கூறியதுபோன்று நாம் இந்நாட்களில் குறிப்பாக இறைவன் பக்கம் குனிய வேண்டும். அவனது அருளையும் கருணையையும் வேண்ட வேண்டும். எனவே முன்னரை விட அதிகமாக அஹ்மதியாகிய நாம் அல்லாஹ்வின் முன் குனிவதற்கு முயற்சி செய்ய வேண்டும். சிலர் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இது அடையாளம் என்ற முறையில் வந்த தொற்றுநோய் என்கின்றனர். எனவே எச்சரிக்கை அல்லது நிவாரணம் தேவையில்லை என்று நினைக்கின்றனர். அல்லது இன்னுஞ்சிலர் மற்றவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்துகிற கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

இது தனிப்பட்ட அடையாளம் இல்லையா? என்று நமக்குத் தெரியாது. ஆனால் பொதுவாக நாம் கூறுகிறோம். நான் ஏற்கனவே கூறியதுபோன்று சில குத்பாக்கள் முன்னர் கூட இந்த நோயின் ஆரம்ப வேளையில் குத்பாவில் கூறி வந்தேன். பூமி அல்லது வானத்து நோய்கள், ஆபத்துகள் அதிகமாகி விட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றத்திற்குப் பிறகு மிகவும் அதிகமாகி விட்டன. பொதுவாக இதனைக் கூறலாம். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்து தொற்றுநோயுடன் இணைத்துப் பேசுவது அதுபோன்று பேசுவது, அஹ்மதிகள்

(நவூதுபில்லாஹ்) இதனால் மரணமடைந்து விட்டால் அவரது ஈமான் பலவீனமானது அல்லது (பலவீனமாக) இருந்தது என்று கூறுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை.

பிளேக் நோய் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஓர் அடையாளமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்கூட இந்த பிளேக் நோயால் மரணிப்பவரை ஷஹீது என்று கூறியிருந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி.. ஹதீஸ் எண் 5733)

ஆனால் அந்த பிளேக் நோய் அடையாளமாக வந்தது என்பதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கூறி இருந்தான். அந்த வகையில் அந்நோயை ஓர் அடையாளமாக அன்னார் கூறினார்கள். ஜமாஅத்திற்கு அது குறித்து வழிகாட்டலும் வழங்கினார்கள். எனவே அந்த பிளேக் நோய் ஒரு தனித் தகுதி வாய்ந்ததாகும். அப்போது கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்கு கூறினார்கள். முப்தி சாஹிபிடம் பத்திரிகையில் அறிவிக்குமாறு கூறினார்கள். நான் எனது ஜமாஅத்தை அல்லாஹ் இதிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று அதிகமாக துஆ செய்கிறேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆனால் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகியுள்ளது என்னவெனில், இறை தண்டனை இறங்கும்போது தீயவர்களுடன் நல்லவர்களையும் சேர்த்து சுருட்டி விடுகிறது. பிறகு அதன் தாக்கம் அவரது அமலுக்கேற்ப ஏற்படும்.

எனவே நல்லவர்களுக்கு எந்தத் தாக்கமும் ஏற்படாது என்பது கிடையாது. நல்லவர்களுக்கும் தாக்கம் ஏற்படும். ஏற்கனவே கூறப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: இயற்கைச் சட்டத்தின் தாக்கம் ஏற்படுகிறது. பாருங்கள். நூஹின் காலத்து வெள்ளப்பெருக்கின் தாக்கம் எல்லாரின் மீது ஏற்பட்டது. ஒவ்வொரு ஆண், பெண், குழந்தைகளையும், அவரைப் பற்றி முழுமையாகத் தெரியாதவர்களையும், அவரது வாதமும் அவர் வைத்த சான்றுகளையும் தெரியாதவர்களும் வெள்ளப்பெருக்கினால் அழிந்தனர்.

மேலும் கூறுகிறார்கள்: ஜிஹாது நடைபெறும்போது வெற்றிகள் ஏற்பட்டன. அவை அனைத்தும் இஸ்லாத்திற்கு அடையாளங்களாக இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சஹாபா ஜிஹாதில் பங்கு பெற்றனர். அதில் வெற்றிகள் கிடைத்தன. பிறகு நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் காலத்திலும் ஜிஹாது நடைபெற்றது. அவற்றில் சில தோல்விகளும் ஏற்பட்டன. பொதுவாக வெற்றிகள் கிடைத்தன. இவை அனைத்தும் இஸ்லாத்தின் வெற்றிக்குக் கிடைத்த அடையாளங்களாகும். ஆனால் ஒவ்வொன்றிலும் மறுப்பவர்களுடன் முஸ்லிம்களும்தான் கொல்லப்பட்டனர். மறுப்பவர்கள் மட்டும்தான் மரித்தனர் என்ற நிலை இருக்கவில்லை.

ஜிஹாது என்பது ஓர் அடையாளமாக இருந்தது. எனினும் அதில் முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். முஸ்லிம்களில் எவர் கொல்லப்பட்டாரோ அவர் ஷஹீது என்று அழைக்கப்பட்டார். அவ்வாறே பிளேக் நோய் நமது உண்மைக்கு ஓர் அடையாளமாகும். நமது ஜமாஅத்தில் சிலரும்கூட ஷஹீது ஆவது சாத்தியமே. எல்லாவற்றிலும் மேலாக அல்லாஹ்வின் கடமைகளை நிறைவேற்றுங்கள். உங்கள் உள்ளங்களை மன எழுச்சிகளிலிருந்து தூய்மையாக்கி வையுங்கள். பிறகு அடியாருக்குரிய கடமைகளை நிறைவேற்றுங்கள். இறைவன் மீது உண்மையான ஈமான் கொள்ளுங்கள். பணிந்து இறைவன் முன் துஆ செய்யுங்கள். நீங்கள் இறைவன் முன் அழுது துஆ செய்யாத ஒருநாளும் உங்களிடம் வர வேண்டாம். இதற்குப் பிறகு நீங்கள் வெளிப்படையான எல்லா நடவடிக்கைகளையும் முழுமைப்படுத்துங்கள்.

பிறகு கூறினார்கள்: உங்களில் எவராவது இறை நியதியின்படி பிளேக் நோயால் மரணித்தால் அவருடனும் அவரது உறவினர்களுடனம் முழுமையாக அனுதாபம் காட்டுங்கள். ஒவ்வொரு வகையிலும் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்களின் நிவாரணப் பணிகளில் எந்த தாமதமும் செய்யாதீர்கள். எல்லா முயற்சியும் செய்யுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். அனுதாபம் என்பதன் பொருள், அவர்களின் விஷம் தோய்ந்த மூச்சுக்காற்று அல்லது உடைகளினால் பாதிப்புக்கு உள்ளாவதன் பெயர் அல்ல.

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 251–253)

நிச்சயமாக அனுதாபம் காட்டுங்கள். ஆனால் தடுப்பு நடவடிக்கை மிகவும் அவசியமாகும். அந்நோயிலிருந்து தப்பிப்பது அவசியமாகும். அதன் தாக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

இதிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டும். உதவி செய்பவர்கள் அவசியமான தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தற்காலத்தில் மாஸ்க் அணியுமாறு கூறப்படுகிறது. மற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அதுபோன்று காரணமின்றி மக்களின் வீடுகளுக்குச் செல்வதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும். அரசும் தடுத்திருக்கிறது. அதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

தற்காலத்தில் யூ.கே –வில் அரசு கவனமூட்டிய பிறகும் தடுத்த பிறகும் கூட மக்கள் பார்க்குகளுக்கு சென்று ஒன்றுகூடி அமர்கின்றனர். நீங்கள் பார்க்கில் நடந்து செல்வதற்கு மட்டும்தான் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஓரளவுக்கு திறந்த காற்றில் செல்லலாம். பார்க்குகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கலாம். பலர் ஒன்றுகூட அமரலாம் என்பதன்று. இது தவறான நடைமுறையாகும். அரசு மீண்டும் மீண்டும் கவனமூட்டுகிறது. கார்களில் அமர்ந்து செல்கின்றனர். பார்க்குகளில் காற்று வாங்க செல்கின்றோம் என்கிறார்கள். பிறகு நடந்தே பார்க்கிற்கு செல்லலாம் தானே?

பிறகு சைக்கிளில் செல்லாமல் கார்களில் ஒன்றாக அமர்ந்து செல்வது தவறான நடைமுறையாகும். சில இடங்களில் கவுன்சில் பார்க்கிங் பகுதியை மூடி விட்டார்கள். கார்களைக் கொண்டு வர அனுமதி இல்லை. பார்க்கிங் அனுமதி இல்லை.

எவ்வாறிருப்பினும் அஹ்மதிகள் இதுபோன்ற வேண்டாத வேலைகளிலிருந்து விலகி இருக்க வேண்டும். நிறைய தன்னார்வர்கள் தம்மைப் பணிக்காக ஒப்படைத்திருக்கிறார்கள். உதவி செய்கிறார்கள். இவர்கள் எல்லா தற்காப்பு ஏற்பாட்டையும் செய்தவாறு உதவிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். தடுப்பு நடவடிக்கை இல்லாத செயல்களிலிருந்து விலகியிருங்கள். காரணமின்றி உங்களை நீங்களே அழிவில் போட்டுக் கொள்ள வேண்டாம். அவ்வாறு செய்வது அறியாமையாகும். வீரமிக்க செயல் அன்று. இது அறியாமையாகும். நிறைய முன்னெச்சரிக்கை நடைமுறைகளைப் பேணுங்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எம்முடைய அடையாளங்களைப் பொய்யாக்கி அகங்காரம் காட்டி அவற்றைப் புறக்கணித்து விட்டவர்களுக்கு வானத்தின் வாசல்கள் திறக்கப்பட மாட்டாது. (7:41)

Faizal Hameed Ilahi, Tittacherry

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இறைவன் அவ்வாறு நடக்காமல் இருக்கச் செய்வானாக. எவராவது இந்த நோயினால் மரணித்து விட்டால் அவர் ஷஹீது ஆவார். அவரை குளிப்பாட்ட வேண்டிய அவசியம் இல்லை. புதிய கஃபன் அணிவிப்பதும் அவசியமில்லை. ஷஹீதுகளின் நடைமுறையே பிளேக்கினால் மரித்தவர்களுக்கு செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இங்குள்ள அரசு எந்த அளவுக்கு அனுமதி வழங்கியுள்ளது எனில் குளிப்பாட்டலாம். கஃபன் அணிவிக்கலாம். ஆனால் அக்காலத்தில் மிகக் கடுமையான நிலை இருந்தது. அப்போது அன்னார் அதற்கு தேவையில்லை என்று கூறினார்கள்.

பிறகு கவனமூட்டலாக அன்னார் கூறினார்கள்: வீடுகளை நன்றாக அதிகம் சுத்தம் செய்யுங்கள். குறிப்பாக இதனைக் கூறினார்கள். பிறகு அத்துடன் கூறினார்கள். உங்கள் ஆடைகளைத் தூய்மையாக வைத்திருங்கள். கழிவுநீர் ஓடைகளைத் தூய்மையாக வையுங்கள். இங்கு அன்டர்கிரவுண்டில் சிஸ்டம் இருக்கிறது. குறிப்பாக முன்னேற்றமடையாத நாடுகளில் கழிவுநீர் ஓடைகள் திறந்த வெளியில் இருக்கின்றன. இவை மிகவும் முக்கியமான விஷயமாகும். அதனை தூய்மையாக வைக்க வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பாகக் கூறினார்கள்: எல்லாவற்றிலும் முதன்மையான விஷயம் என்னவெனில் உங்கள் உள்ளங்களை தூய்மையாக வையுங்கள். இறைவனுடன் முழுமையாக சமாதானம் மேற்கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 253)

நாம் இந்தச் சூழலில் இந்த தொற்றுநோயால் ஒவ்வொருவரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறோம். நான் கூறுவதுபோன்று எழுதக் கூடியவர்கள் அதனை எழுதிக் காண்பிக்கவும் செய்கிறார்கள். இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். நாம் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். நமக்காக துஆவின் வழி திறந்தே உள்ளது. நாம் திட உறுதியுடன் அல்லாஹ்வின் முன் குனிய வேண்டும். அல்லாஹ் நமக்கு துஆவின் வழியைத் திறந்து தந்துள்ளான். இறைவன் துஆக்களைக் கேட்கிறான். கலப்பற்ற முறையில் அவன் முன் குனியும்போது அவன் அதனை ஏற்றுக் கொள்கிறான். அதனை நன்றாக அறிகிறான்.

பொதுவாக நமக்காகவும், நமது அன்புக்குரியவர்களுக்காகவும், நமது உறவினர்களுக்காகவும், ஜமாஅத்திற்காகவும், பொதுவாக மனித குலத்திற்காகவும் துஆ செய்ய வேண்டும். உலகில் அதிகமான மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் அஹ்மதிகளும் இருப்பார்கள். அவர்களிடம் தற்காப்புப் பொருள்கள் இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு சிகிச்சைக்கு வழியில்லாமல் இருக்கலாம். உண்ண குடிக்க வழியில்லாமல் இருக்கலாம்.

அல்லாஹ் அவர்களுக்கும் நம் அனைவர் மீதும் கருணை காட்டுவானாக. நாம் ஜமாஅத் அளவில் இந்தச் சூழலில் ஒவ்வோர் அஹ்மதி வரை உணவுப் பொருட்களைக் கொண்டு சேர்க்க முயற்சி செய்கிறோம். ஆனால் பிறகும் கூட அதில் குறைபாடு ஏற்பட்டு விட வாய்ப்புள்ளது. ஆனால் முயற்சியோ, உணவும் சிகிச்சையும் எல்லாருக்கும் கிடைக்க வேண்டும் என்பதாகும். இருந்தும் கூட அஹ்மதிகளிடம் சென்று சேர்ப்பதில் குறைபாடு ஏற்பட்டு விடுகிறது. ஆனால் நாம் எவ்வளவு முயற்சி செய்கிறோம் எனில் அந்நியருக்கும் கூட உணவு மற்றும் சிகிச்சைகளை கொண்டு சேர்க்க முயற்சி செய்கிறோம். தன்னலமற்ற இந்தச் சேவையை கலப்படமற்ற அனுதாப உணர்வுடன் செய்கிறோம். பிறகும் கூட சில தாக்கத்திற்குள்ளான மீடியாக்கள் அல்லது பெயர் தாங்கி ஆலிம்கள் அஹ்மதிகள் செய்கிற உணவு மற்றும் மருந்துகள் வழங்குதல் அனைத்தும் தமது பிரச்சார நோக்கத்தில் செய்கிறார்கள் என்று கூறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், இந்தக் குற்றச்சாட்டு நம்மிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. அல்லாஹ் நமது நிய்யத் மற்றும் உணர்வை அறிகிறான். பிறகும் நான் கூறுவேன். தற்காலத்தில் துஆக்கள், துஆக்கள் மற்றும் துஆக்களில் அழுத்தம் கொடுங்கள். அல்லாஹ் ஜமாஅத்தை எல்லா வகையிலும் ஒவ்வொரு தனி மனிதரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் துஆ செய்யவும் துஆ ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியையும் வழங்குவானாக.

அஹ்மதி வியாபாரிகள் தாம் விற்கின்ற பொருள்களில் அதிக இலாபம் ஈட்டுவதற்கு தற்போது முயற்சி செய்ய வேண்டாம். அளவு கடந்த இலாபம் ஈட்டுவதற்குப் பதில் குறிப்பாக அத்தியாவசிய பொருளான உணவு பானம் ஆகியவற்றைக் குறைந்த இலாபத்தில் விற்க வேண்டும். இதுவே மனித குலத்திற்குச் சேவை செய்யும் நாள்கள் ஆகும். அது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள். அனுதாப உணர்வைக் கடைபிடிக்குமாறு கூறியிருந்தார்கள். இதுவே அடியாருக்குள்ள உரிமையை நிறைவேற்றும் நாள் ஆகும்.

இந்த நாட்கள் இதன் மூலமாக இறைவனது நெருக்கத்தைப் பெறும் நாள்கள் ஆகும். அல்லாஹ் நமது வியாபாரிகளான மக்களுக்கு இந்த வாய்ப்பை வழங்குவானாக. அவர்கள் அளவு கடந்த இலாபம் ஈட்டுவதற்குப் பதில் அனுதான உணர்வுடன் தமது தொழிலை நடத்திச் செல்லுங்கள்.

இப்போது நான் கடந்த நாள்களில் மரணித்த நமது அளவு கடந்த பற்றுமிக்கத் தொண்டரும் இயக்கச் சேவகருமான கண்ணியமிக்க நாஸிர் அஹ்மது ஸயீது சாஹிப் பற்றி கூறுவேன். இவர் 5 ஏப்ரல் அன்று இறை நியதிற்கேற்ப வஃபாத் ஆகிவிட்டார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

நாஸிர் அஹ்மது ஸயீது சாஹிப் 1951 –ல் ஸியால்கோட் மாவட்டத்தின் டஸ்கா என்ற பகுதியிலுள்ள ஓர் ஊரில் பிறந்தார். தந்தை பெயர் தாஜுத்தீன் சாஹிப். நாஸிர் சாஹிப் பிறப்பு அஹ்மதி ஆவார். அதிகமாகக் கல்வி கற்கவில்லை. நடுநிலைப்பள்ளி அளவுக்கு எட்டாம் வகுப்பு வரை கற்றிருந்தார். பிறகு 1973 –ல் நஸாரத் உமூரே ஆமாவின் கீழ் சிறப்புப் பாதுகாப்புப் பணியாளராக நியமிக்கப்பட்டார்.

நான் கருதுகின்றேன். அதாவது 1984 –ல் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ரப்வாவை விட்டு இடம்பெயர்ந்த பிறகு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இவரும் 1985 –ல் இடமாற்றம் பெற்றார். எவ்வாறிருப்பினும் 1985 –ல் இவருக்கு இலண்டனுக்கு பணிமாற்றம் ஏற்பட்டது. அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தார். வயதின் அடிப்படையில் அக்டோபர் 2010 –ல் அலுவலக நடைமுறைப்படி பணி ஓய்வு தரப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகும் இவர் பணி செய்து வந்தார். அல்லாஹ்வின் அருளால் மூன்றாவது

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனை(ந்து கூறு)கின்றவனை விடவும் அல்லது அல்லாஹ்வின் வசனங்களைப் பொய்ப்படுத்துகின்றவனை விடவும் கொடியோன் எவன்? அவர்களுக்கு விதித்துள்ளதிலிருந்து அவர்களுக்குரிய பங்கு அவர்களுக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும். (7:38)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

கிலாஃபத்திலிருந்து இப்போது வரை இவருக்கு பணி செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது.

நாஸிர் ஸயீது சாஹிப் நிறைய நற்செயல்களை உடையவர். மிகவும் ஈமானுடனும் தகுதியுடனும் தமது பணியைச் செய்து வந்தார். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இவருக்கு உண்மையான அன்பு இருந்தது. இவரது நினைவாக இவரது மனைவியார் கல்ஸூம் பேகம் சாஹிபா, ஒரு மகன் காலித் ஸயீது சாஹிப் மற்றும் அவரது பிள்ளைகள் உள்ளனர். காலித் சாஹிப் தன்னார்வராகச் சிறப்புப் பாதுகாப்புப் பணி செய்து வருகிறார்.

அல்லாஹ் இவரையும் நாஸிர் ஸயீது சாஹிபைப் போன்று பற்று விசுவாசமிக்கவராக ஆக்குவானாக. அவரது அடியொற்றி நடக்கச் செய்வானாக. நாஸிர் ஸயீது சாஹிபின் மனைவிக்கு தைரியத்தை வழங்குவானாக. நாஸிர் ஸயீது சாஹிபுடைய உறவினர் மாமா மகன் மஹ்மூது சாஹிப் ரப்வாவில் இருக்கிறார். மஹ்மூது சாஹிப் முதலில் இராணுவத்தில் பணியாற்றினார். நாஸிர் ஸயீது சாஹிபுடைய ஒத்த வயதுடையவர் ஆவார். நாஸிர் ஸயீது சாஹிபுடைய பெற்றோர் அவரிடம் நீயும் இராணுவத்தில் சேர்ந்து விடு அல்லது ஏதாவது வேலைக்குச் செல் என்று கூறியபோது, இவர் பணி செய்வதாயின் ஜமாஅத் பணிதான் செய்வேன் அல்லது எனக்கு சிறிய நிலம் உள்ளது. அதில் பணியைச் செய்து வருவேன் என்று கூறிவிட்டார். பிறகு ஜமாஅத்திற்கு வந்தார். முன்னேற்றமடைந்தார்.

இவரது உறவினர் கூறுகிறார்: இவர் தமது உறவினர்களுடன் அன்பு நேசத்துடன் பழகுவார். தேவையுள்ள உறவினர்களுக்கு மறைவான முறையில் உதவிகள் செய்து வருவார்.

ரப்வாவில் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவைச் சார்ந்த சுகுர் சாஹிப் அம்லாவில் பணி செய்பவர். அவர் கூறுகிறார்: எனக்கு 1990 முதல் 1998 வரை இலண்டனில் நாஸிர் ஸயீது சாஹிபுடன் பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அவரை எப்போதும் கிலாஃபத்தின் பற்று கொண்டவராகவும், கட்டுப்படுதல் உள்ளவராகவும் பார்த்துள்ளேன். எப்போதும் டியூட்டியில் ஈமான் உள்ளவராக இருந்து வந்தார். எப்போதும் தமது டியூட்டியின் நேரத்திற்கு முன்னரே வந்து விடுபவராக இருந்தார். அவரிடம் ஒரு மறைவான தூதுச்செய்தி வழங்கப்பட்டால் அதனை மறைமுகமாகவே வைத்திருப்பார். தம்முடன் இருப்பவர்களிடமும் அவ்வாறே இதனை இரகசியமாக வைக்க வேண்டும் என்று போதனை செய்வார். தாமும் எவரிடமும் கூறமாட்டார்.

சிறப்புப் பாதுகாப்புப் பிரிவைச் சார்ந்த மேஜர் மஹ்மூது சாஹிப் எழுதுகிறார்: இவர் மிகவும் பற்றுணர்வு உள்ள சேவகராக இருந்தார். இவரது ஆன்மாவில் கிலாஃபத் அஹ்மதிய்யாவின் மாய்தல்தான் நிலைத்திருந்தது. உலகியல் ஆசைகளிலிருந்து விலகி இருந்தார். மார்க்கப் பணி இவரது கண் குளிர்ச்சியாக இருந்தது. சேவையைத் தவிர வேறு சிந்தனை இருந்ததில்லை.

கிலாஃபத்தின் பாதத்திலேயே உயிரை விட வேண்டும் என்பதே உள்ளத்து ஆசையாக இருந்தது. அதனை அவர் உண்மையாக்கிக் காட்டி விட்டார். விருந்தோம்பலிலும் மிகவும் ஆர்வமுள்ளவர். அவருக்கு அதில் அவரே உதாரணமாகத் திகழ்ந்து வந்தார். ஒவ்வொரு பெரியவர் சிறுவர்களின் கண்ணியத்தையும் மதிப்பவராக இருந்தார். தமது சீனியர்களுக்கு மிகவும் மரியாதை தருவார். உதடு, நாவு மூலமாக எந்தப் புகாரும் கூறியதில்லை. எப்போதும் ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்றுவதைக் கடமையாகக் கருதினார்.

மேஜர் சாஹிப் மேலும் எழுதுகிறார்: இவர் வாழ்வை அர்ப்பணித்தவரின் வாழ்க்கைக்கு தன்னிகரற்ற உவமை ஆவார். உண்மையும் இதுவேயாகும். அவ்வாறே இவர் தமது அர்ப்பணிப்பு வாழ்வை வாழ்ந்து வந்தார்.

ஜாமிஆ ஜெர்மனியின் மாணவர் ஹாரூன் சாஹிப் எழுதுகிறார்: பலமுறை அனுபவம் ஏற்பட்டுள்ளது. இருவருக்கிடையில் மனக்கசப்பு ஏற்பட்டால் இவர் சமாதானம் செய்வதில் வல்லவர். நான் அவரிடம் எப்போதாவது விடுறை எடுத்து எங்காவது சென்றிருக்கிறீர்களா? என்று கேட்டபோது அவர், காலத்தின் கலீஃபாவுக்காக டியூட்டி கொடுப்பதும், அவருக்கு டியூட்டி தர வருகை தருவதும்தான் வாழ்வை அர்ப்பணித்தவருக்கு விடுமுறையாகும். வேறு நோக்கம் எதுவும் இருக்கக் கூடாது என்றார்.

இவரது நல்லொழுக்கம், விருந்தேம்பல், சமூகமான நடைமுறை அன்பு, நேசம் பற்றி எண்ணற்றோர் கூறியிருக்கிறார்கள். ஜமாஅத்தின் பெரிய பொறுப்பில் இவர் இருந்ததில்லை. ஆனால் சாதாரண பணியாளராக இருந்தும் கூட உளப்பூர்வமாக ஒவ்வொருவரும் அவரைச் சந்திக்க ஆவல் ஏற்படும்.

ஜெர்மனியின் நஸீர் பாஜுவா சாஹிப் கூறுகிறார்: இவர் மிகவும் நற்குணம் படைத்தவர். எல்லாருக்கும் நன்மையையே யோசிப்பார். ஒவ்வொருவருக்கும் எப்போதும் பணி செய்யத் தயாராக இருப்பார். மற்றவருக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி அடைவார். அதில் உள்ள நிம்மதி அடவார்.

அமெரிக்காவின் ஒரு காதிம் ஸயீது உவைஸ் எழுதுகிறார்: இதுபோன்று பல நாட்டிலிருந்தும் இவரைப் பற்றி கடிதம் வருகிறது. அனைத்தையும் இங்கு கூற முடியாது. இவர் அமெரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் வந்தபோது மிகவும் எளிமையாகச் சந்திப்பார். இவரிடம் அலுப்பின் தோற்றமே இருப்பதில்லை. குத்தாம்களை மிகவும் அன்புடன் சந்திப்பார். அவர்களின் தைரியத்தை வளர்க்க முயற்சி செய்தார்; புரிய வைத்தார்.

புரோஸ் ஆலம் சாஹிப் எழுதுகிறார்: நிறைய சிறப்புகளைக் குறிப்பிட்டுள்ளார். இவரது எளிமை, விருந்தோம்பல், இபாதத் பற்றி குறிப்பிட்டுள்ளார். நான் பார்த்துள்ளேன். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் நோயுற்றிருந்தபோத மஸ்ஜிதில் இரவில் தஹஜ்ஜுத் நேரத்தில் மிகவும் துடிப்புடன் துஆ செய்வதைக் கண்டுள்ளேன்.

ஜெர்மனியின் முன்னாள் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யா ஹஸனாத் சாஹிப் எழுதுகிறார்: இவரது நல்லொழுக்கம், டியூட்டியில் ஈடுபாடு, கிலாஃபத்தின் மீது பற்று இவற்றைப் பார்க்கும்போது பொறாமை ஏற்படும். ஒரு பக்கம் எளிமை, மறுபுறம் இவரிடம் தனி ஞானம் இருந்தது.

மேலும், குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவர் என்ற முறையில் பல இடங்களில் பணி செய்யும் வாய்ப்பைப் பெற்றிருந்ததால் கூறுகிறார்: ஸயீது சாஹிப் தமது வயது அதிகம் என்று வெளிப்படுத்தியதில்லை. டியூட்டியில் எப்போதும் மற்றவர்களைப் போன்று இளைஞரைப் போன்று தென்படுவார்.

அதே சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆகிய ஹஸனாத் சாஹிப் கூறுகிறார்: பலமுறை நான் பார்த்துள்ளேன். வயது அதிகம் என்ற

## திருக்குர்ஆனிலிருந்து...

ஆதமின் மக்களே! என் வசனங்களை உங்களுக்கு ஓதிக்காட்டக் கூடிய தூதர்கள் உங்களிடமிருந்தே நிச்சயமாக உங்களிடம் வரும்போது இறையச்சத்தை மேற்கொண்டு திருந்திக் கொள்வோருக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எவ்வித அச்சமும் ஏற்படாது; அவர்கள் (சென்ற காலத்தைப் பற்றிக்) கவலையடையவுமாட்டார்கள். (7:36)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

அடிப்படையில் இவரிடம் யாராவது நடந்து கொண்டால் அதனைச் சகிக்க மாட்டார். இளைஞர்கள் எவ்வாறு டியூட்டி தருகிறார்களோ அதனைப் போன்று தருவேன் என்பார். சிறுவர்களுடன் அன்புடன் நடந்து கொள்வார். இவரது நடைமுறையைப் பார்த்து நமக்கு வெட்கம் ஏற்படும். நமது டியூட்டி தரும் இளைஞர்களுக்கு தைரியமூட்டுவார். மிகச் சிறந்த விஷயம் என்னவெனில், மக்கள் கேம்ப் போட்டு டிரைனிங் தருவார்கள். இவரது டியூட்டியோ கலப்பற்ற நடைமுறையுடன் கூட துஆ மூலமாக வழங்கிய டியூட்டியாக இருந்தது. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் எனக்கு முடிவு நல்லதாக அமைய துஆ செய்யுங்கள் என்று கூறுவார்கள்.

காலிக் அஹ்மது சாஹிப் ரஷ்யன் டெஸ்க் கூறுகிறார். எல்லாரும் எழுதுகிற பல விஷயங்களை எழுதி விட்டு மேலும் எழுதுகிறார்: இவர் எப்போதும் அமைதியாக தேவை உடையவர்களுக்கு உதவி செய்வார். ஜமாஅத்தின் தகுதி வாய்ந்தவர்களை நெருங்கிய உறவினர்களுக்கு உதவி செய்யுமாறு தூண்டவும் செய்வார். அவரது இன்னொரு சிறப்பு விருந்தினர்களைக் கண்ணியம் செய்தல் ஆகும்.

குறிப்பாக ஜல்ஸா நடக்கும் நாள்களில் இவரது இந்தப் பணி உச்சத்தில் இருக்கும். ஜல்ஸாவுக்கு வந்த விருந்தினர்களை உள்ளத்தால் மரியாதை செய்வார். பல விருந்தினர்களை எந்த மிகையும் இன்றி அவர் தலைமையகத்திலிருந்து வந்திருந்தாலும், வேறு பகுதியிலிருந்து வந்திருந்தாலும் அவர்கள் தினமும் காலையும் மாலையும் தனது வீட்டிற்கு அழைத்து எந்தப் பகட்டுமின்றி அவையில் அமர்த்தி பகட்டற்ற உணவு வழங்குவார். அத்துடன் ஒவ்வொரு விருந்தினருக்கும் பள்ளியில் விரிக்க தொழுகை விரிப்பு ஒன்றும் அன்பளிப்பாக வழங்குவார்.

ஜெர்மனியின் அத்ஹர் ஸுபைர் சாஹிப் இவரது பிற சிறப்புகளுடன் கிலாஃபத்துடன் பற்று விசுவாசம் இருந்தது என்றும் கலப்பற்ற முறையில் இருந்ததாகவும் இவரது உரையாடல் மிகவும் மென்மையாக இருக்கும் என்றும் கூறுகிறார். இவரது பணி வேளையில் பார்த்துள்ளேன். இவரது பணி வேளை முடிந்து அடுத்த வர வேண்டியவர் வர தாமதம் ஆகி விட்டால் முறையீடு செய்யமாட்டார். நன்றி செலுத்துவார். காலத்தின் கலீஃபாவுக்கு சிறிது அதிக நேரம் டியூட்டி தர வாய்ப்பு கிடைத்ததாகக் கூறுவார். எப்போதும் பணி செய்யத் தயாராக இருப்பார்.

நோயுற்றிருக்கும் போது கூட விரைவாக டியூட்டியில் இருந்து விடுபட விருப்பம் தெரிவிக்க மாட்டார். கடைசி நோயில் கூட தமது மகனிடம் கூறினார் என்று கேள்விப்பட்டேன். இப்போது நேரம் என்ன? என்று கேட்டார். அதன் பொருள் எனது டியூட்டி தரும் நேரம் வந்து விட்டது என்பதாகும். நோயுற்ற நிலையிலும் டியூட்டியைப் பற்றியே கவலை இருந்தது.

ஹம்ஸா ரசீது சாஹிப் இங்குள்ளவர் அவர் கூறுகிறார்: மிகவும் அன்பு, நேசம் கொண்டவர். தைரியமூட்டக்கூடிய நல்ல பெரியவர் ஆவார். குத்தாம்களுக்கு இவர் ஒரு முன்மாதிரி ஆவார். உழைத்து உளப்பூர்வமாக பணி செய்வார். கிலாஃபத்துடன் அளவு கடந்த அன்பு செலுத்துபவர். குத்தாம்களுக்கு எப்போதும் கவனமூட்டி வருவார். நீங்கள் காலத்தின் கலீஃபாவுக்கு அன்புடன் டியூட்டி தர வேண்டும். இவ்விஷயத்தில் எல்லா விஷயத்தை விடவும் முன்னுரிமை தர வேண்டும் என்பார்.

இந்தோனேஷியாவின் முரப்பி சய்யித் தஆ நூர் சாஹிப் கூறுகிறார்: எப்போது நேரம் கிடைத்தாலும் இந்தோனேஷியா பற்றி கூறுவார். நான்காவது கலீஃபாவுடன் 2000 –ல் இந்தோனேஷியா சென்றிருந்தார். அவ்வேளையைப் பற்றி கூறுவார். ஒருமுறை பள்ளிக்கு வந்திருந்தார். துணிகளைத் துவைக்க ஏற்பாடு இருக்கவில்லை. நாம் அவரிடம் துணிகளைத் தாருங்கள். வெளியில் துவைத்துக் கொண்டு வந்து தருகிறோம் என்று கூறியதும், அவரும் அவரது மற்ற நண்பர்களும் நாங்களே எங்கள் துணிகளைத் துவைத்துக் கொள்வோம்.

நாங்கள் பணியாளர்கள்தான். எங்கள் துணிகளை மற்றவர்கள் துவைக்கும் அளவுக்கும் பெரிய ஆட்கள் அல்ல என்று கூறி விட்டனர். பெரு முயற்சி செய்தும் தமது துணிகளைத் தரவே இல்லை. இவையெல்லாம் வெளிப்படையில் சிறிய சிறிய விஷயங்கள்தான். ஆனால் வாழ்வை அர்ப்பணித்தவரின் வாழ்வின் உயிரை அதில் பார்க்க முடிகிறது. எவ்வாறு ஒரு வாழ்வை அர்ப்பணித்தவர் இருக்க வேண்டும் என்று காட்டுகிறது. இளைஞர்களுக்கும் இதில் பாடம் இருக்கிறது.

யூ.கே –வின் முன்னாள் உள்ளூர் முஹ்தமிம் அதுனான் சபர் சாஹிப் எழுதுகிறார்: டியூட்டி தருவது பற்றி குறிப்பாக எங்களுக்கு கவனமூட்டி வருவார். மற்ற எல்லா விஷயங்களுடன் குறிப்பான விஷயமாக எழுதியுள்ளார். டியூட்டியின்போது உணவு, குடிநீர் விஷயங்களில் கவனம் செலுத்துவார். அத்துடன் எழுதியுள்ளார். கிலாஃபத்தின் கண்ணியத்தை இவர் கற்பித்துத் தந்தார். கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு ஏற்படுத்தும் வழிமுறையைப் புரிய வைத்தார். மிகவும் தொலைநோக்குப் பார்வையுடைவர். எந்த விஷயத்திலும் இவரிடமிருந்து ஆலோசனை பெற்றுப் பயனடைந்துள்ளேன்.

சிறப்புப் பாதுகாப்புச் சேவகர் அத்ஹர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்: நான் 9 வருடங்கள் 2011 முதல் 2020 வரை பணி செய்துள்ளேன். பொதுவான பாதுகாப்புப் பிரிவில் இருந்தேன். பிறகு சிறப்புப் பாதுகாப்புப் படையில் இணைக்கப்பட்டேன். நீங்கள் 48 வருடங்கள் கிலாஃபத்துடன் டியூட்டி தந்துள்ளீர்கள். எனக்கு ஏதாவது போதனைன செய்யுங்கள். நானும் உங்களைப் போன்று டியூட்டி தர வேண்டும் என்று நாஸிர் ஸயீது சாஹிபிடம் நான் கேட்டபோது அவர் கூறினார்.

நீங்கள் உங்கள் கண்கள் காதுகளையும் திறந்து வைக்க வேண்டும். நாவை மூடி வைக்க வேண்டும். அத்துடன் துஆ செய்த கொண்டிருக்க வேண்டும் என்றார். இந்தப் போதனை ஒவ்வொரு வாழ்வை அர்ப்பணித்தவருக்கும் அமல் செய்வது அவசியமானதாகும். ஒவ்வொரு சேவகர் மற்றும் பணி செய்பவருக்கும் மிகவும் அவசியமானதாகும். ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் அவசியமானதாகும். இது மிகவும் வெற்றிக்குரிய விஷயமாகும்.

பிறகு அவர் கூறுகிறார்: இவருடன் டியூட்டி செய்பவர்கள் இவரை லாலாஜி என்று கூறுவர். லாலாஜி உடன் டியூட்டி செய்த போது தெரிய வந்தது. அதிகாரிகளிடமிருந்து கட்டளை வந்தால் கட்டளை வந்தபடி நிறைவேற்ற வேண்டும். அவ்வாறே அவர் செய்வார். செய்யவும் வைப்பார். அந்தக் கட்டளை குறித்தும் தன் மனதுக்கேற்ப பொருள்களை கற்பிப்பதில்லை. இதற்கு இப்படியும் பொருள் இருக்கலாம். அப்படியும் இருக்கலாம் என்று பொருள் தருவதில்லை.

அவர் கூறுகின்றார்: எவ்வாறு கூறப்பட்டதோ அவ்வாறே செய்வார். எங்களையும் அவ்வாறே பணி செய்ய வைப்பார். இன்ன

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்வோர் (இதனை நினைவில் கொள்வார்களாக). நாம் எவரின் மீதும் அவருடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பைச் சுமத்துவதில்லை. அவர்கள் சுவர்க்கத்திற்குரியவராவர்; அதில் என்றென்றும் வாழ்ந்து வருவர். (7:43)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

இன்சார்ஜ் இவ்வாறு செய்கிறார் என்று கூறினால் எனக்கும் அவர் எவ்வாறு செய்கிறார் என்று தெரியும். ஆனால் எனக்கு என்ன கட்டளையிடப்பட்டதோ அவ்வாறே செய்ய முடியும் என்பார். மேலும் துஆவுக்காக குறிப்பாக கூறி வருவார். ஓடி ஆடித் திரிய வேண்டும். நேரம் வரும் போது இறைவன் என்னை நடந்து ஓடியிருக்கும் நிலையில் அழைத்துக் கொள்ள வேண்டும். எவருடைய தேவை உடையவனாக வைத்து விடக்கூடாது என்றும் அதற்காக துஆ செய்யுமாறும் கூறுவார்.

இறைவன் அவ்வாறே அவரை செய்து விட்டான். அல்லாஹ் மர்ஹூமுடன் மன்னிப்பின் நடைமுறை காட்டுவானாக. இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது மனைவிக்கும் ஆரோக்கியத்துடன் கூடிய வாழ்வை வழங்குவானாக. பொறுமையும் தைரியமும் வழங்குவானாக. இவரது மகனுக்கு பற்று விசுவாசமுடைய வாழ்வை வழங்குவானாக.

நான் ஏற்கனவே கூறியது போன்று கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடன் இணைத்து வைப்பானாக. இவரது சந்ததிகளையும் அவ்வாறே செய்வானாக. இவர் ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய வந்ததிலிருந்து ரப்வாவில் இவரை அறிவேன். இவரைப் பற்றி மக்கள் எழுதியது அனைத்தும் மிகவும் உண்மையாகும். மிகவும் அர்ப்பணிப்புடன் தொண்டு செய்பவராக இருந்தார். மிகவும் முழுமையான கட்டுப்படுதல் உடையவராக இருந்தார். இவரது மரணம் எத்தகைய சூழலில் ஏற்பட்டுள்ளது எனில் ஜனாஸாவில் அதிகமானவர்கள் கலந்து கொள்ளவும் முடியாது.

சிறிது காலம் இவர் இருதய நோயாளியாக இருந்தார். ஆஞ்சியோபிளாஸ்டும் நடந்துள்ளது. சில நாள் முன் நோயுற்றார். மருத்துவமனை சென்றார். டாக்டர்கள் பார்த்தனர். மருத்துவமனையில்தான் இருந்தார். கடுமையான இருதய நோய் ஏற்பட்டுள்ளதாக டாக்டர்கள் கூறினர். பிறகு வைரஸ் தாக்கம் ஏற்பட்டதாகவும் கூறினர். தற்கால மருத்துவமனையின் சூழலில் அங்கு எப்படி எடுத்தான் என்பதையும் எதனால் எடுத்தான் என்பதை இறைவனே அறிவான். எவ்வாறிருப்பினும் சிலநாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அங்கிருந்தே அவரது ரூஹ் அல்லாஹ்விடம் சென்றது.

இங்கு சட்டரீதியான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. எனவே ஜனாஸாவை இங்கு கொண்டு வர இயலாது. சில நெருங்கிய உறவினர்களைத் தவிர்த்து வேறு எவரும் ஒன்றுகூடவும் முடியாது. பிறகு ஜனாஸாவையும் Funeral Home அல்லது கபருஸ்தானில் தான் ஜனாஸா நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. எனவே பிறகு நான் அவரது ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். எழுதக்கூடிய எண்ணற்ற மக்கள் இவரது சிறப்பை எழுதியுள்ளனர். அவை உண்மையானவை. நான் கூறியது போன்று அந்த அனைத்துச் சிறப்புகளும் அவரிடம் இருந்தன. தமது உடன்படிக்கையைப் பற்றுடன் நிறைவேற்றியவாறு உலகை விட்டு விடை பெற்றுச் சென்றுள்ளார். அல்லாஹ்வுடன் செய்த ஒவ்வொரு உடன்படிக்கையையும் நிறைவேற்றினார். அதுவே நமது கண்களுக்குத் தெரிகிறது.

எனவே இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்ற ஷஹீதுகளின் கூட்டத்தில் அடங்குவார். அல்லாஹ் அத்தகையோருடன் சேர்ப்பானாக. எல்லா அஹ்மதிகளும் எவருக்கு இந்த நோயினால் வஃபாத் கிடைக்கிறதோ அவர்கள் அனைவருக்கும் அருள் மற்றும் மன்னிப்பு வழங்குவானாக. எல்லாரின் நிலையையும் அல்லாஹ் நன்றாக அறிவான். ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் ரஹ்மத் மற்றும் மன்னிப்பைப் பெறுவார்களாக.

## சதகத்துல் ஃபித்ர் -ன் விகிதாச்சாரம்

அருளுக்குரிய ரமலான் ஏப்ரல் மாதத்தின் இறுதியில் ஆரம்பமாகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

இஸ்லாத்தில் ஒரு ஸாஹ் நெல் (அதாவது 2 கிலோ 750 கிராம்) என்ற விகிதாச்சாரத்திற்கேற்ப சதகத்துல் ஃபித்ர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுமையான விகிதாச்சாரப்படி சதகத்துல் ஃபித்ரை அருளுக்குரிய ரமலானின் முதல் பத்திலோ அல்லது இரண்டாம் பத்திலோ செலுத்துவதற்கு ஜமாஅத் சகோதரர்கள் முயற்சி செய்யவும். இந்தியாவிலுள்ள மாநிலங்களில் கோதுமை, அரிசி ஆகியவற்றின் விகிதாச்சாரம் வேறுபடுவதால் உள்ளூர் விலைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாச்சாரத்தின் படி (2 கிலோ 750 கிராம் நெல்) சதகத்துல் ஃபித்ர் தொகையை செலுத்தவும்.

பஞ்சாப் மாநிலத்தில் இவ்வருடம் ஸதக்கத்துல் ஃபித்ரின் விகிதாச்சாரம் 55 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் ஜமாஅத்தில் ஏழைகள் மற்றும் தேவையுடையவர்கள் இருப்பார்களாயின் சதகத்துல் ஃபித்ரின் ஒட்டுமொத்த தொகையில் 90 சதவிகிதம் தொகையை உள்ளூர் செயற்குழுவின் ஆலோசனை மற்றும் முடிவுக்குப் பிறகு விநியோகிக்கலாம். மீதமுள்ள தொகையை தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும்.

எந்த ஜமாஅத்தில் ஏழைகளும், தேவையுடையவர்களும் இல்லையோ அந்நிலையில் அந்த ஜமாஅத்தில் வசூல் செய்யப்பட்ட தொகையை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஜமாஅத்தின் வங்கிக் கணக்கிற்கு அனுப்ப வேண்டும்.

சதகத்துல் ஃபித்ர் தொகையை பள்ளிவாசலின் அத்தியாவசியத் தேவைக்காக செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது என்பதை நினைவில் கொள்ளவும்.

## ஈத் ஃபண்ட்

இந்த சந்தா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே இருக்கின்றது. இதன் நோக்கம், மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் மனிதன் தனக்காக ஆடைகள், உணவு மற்றும் விருந்து உபசரிப்பிற்காக பல்வேறு வகையான செலவுகளை செய்கின்றான். மற்றவர்களுக்கு அன்பளிப்பும் கொடுக்கின்றான்.

அதேபோன்று அந்த மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் அவனுக்கு மார்க்கத்தின் குறிக்கோளும் நினைவில் இருக்க வேண்டும். அஹ்மதி உறுப்பினர்கள் பைஅத் உடன்படிக்கையில், உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று உடன்படிக்கை செய்துள்ளனர்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியிடமும் எதிர்பார்க்கப்படுவது என்னவென்றால், இந்த மகிழ்ச்சிகரமான பண்டிகையின்போது மார்க்கத்தின் குறிக்கோளையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் சம்பாதிக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியும் இதற்காக ஒரு ரூபாய் ஈத் ஃபண்டாக கொடுத்து வந்துள்ளார்கள். தற்காலத்தில் ஒரு ரூபாய்க்கு எந்த மதிப்பும் இல்லை. எனவே உங்களது சக்திக்குட்பட்டவாறு நீங்கள் வழங்குங்கள்.

ஆலோசனை என்னவென்றால், ஈத் நாளன்று எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகிறதோ அதில் பாதி தொகையை இதற்காக செலுத்தவும். ஈத் பண்ட் தொகையை பெருநாளைக்கு முன்பாக எப்போது வேண்டுமானாலும் செலுத்தலாம்.

இது தலைமையகத்திற்குரிய சந்தாவாகும். முழுத் தொகையையும் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா வங்கிக் கணக்கில் செலுத்துவது அவசியமாகும். இந்த தொகையிலிருந்து உள்ளூர் அளவில் செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது.

– நாஸிர் பைத்துல் மால் ஆமத், காதியான்

## அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீது திட்டத்தின் ஆழமான பொருத்தங்கள்

தஹ்ரீகே ஜதீது திட்டத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் புனித ரமலானுக்கும், தஹ்ரீகே ஜதீதிற்கும் இடையிலான ஆழமான பொருத்தங்களைப் பற்றி விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

நீங்கள் ரமலானிலிருந்து பயன் பெற விரும்புகிறீர்கள் என்றால் தஹ்ரீகே ஜதீதின்படி செயல்படுங்கள். தஹ்ரீகே ஜதீதிற்கு பயனளிக்க விரும்புகின்றீர்கள் என்றால் நோன்புகளின் மூலமாக சரியான முறையில் பயன் பெறுங்கள். தஹ்ரீகே ஜதீது என்பது என்னவென்றால், சாதாரண வாழ்க்கை வாழ்வதும், கடின உழைப்பு, முயற்சி, தியாகம் ஆகியவற்றிற்கு உங்களை பழக்கமுள்ளவர்களாக ஆக்குவதுமே ஆகும். இந்தப் பாடத்தை உங்களுக்குக் கற்றுத் தருவதற்காகத்தான் ரமலான் வருகிறது. எனவே எந்த நோக்கத்திற்காக ரமலான் வந்ததோ அந்த நோக்கத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள்.... ஒவ்வொருவரும், தமது ரமலான் தஹ்ரீகே ஜதீதை கொண்டதாக இருக்க வேண்டும் என முயற்சி செய்ய வேண்டும். ரமலான் நமது மன உணர்ச்சியை அழிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். தஹ்ரீகே ஜதீது நமது ஆன்மாவிற்கு புத்துணர்ச்சியை அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

எனவே ரமலானிலிருந்து பயன் பெறுங்கள் என்று நான் கூறுகிறேன் என்றால் உண்மையில் நீங்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கத்தையும் குறிக்கோளையும் ரமலானின் ஒளியில் புரியுங்கள் என்பதை நான் உங்களுக்கு புரிய வைத்துள்ளேன் என்பதேயாகும். மேலும் தஹ்ரீகே ஜதீதின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறுகிறேன் என்றால் நீங்கள் ஒவ்வொரு நிலையிலும் உங்களிடத்தில் தக்க வைத்துக் கொள்ளுங்கள் எனக் கூறியிருக்கிறேன் என்பதேயாகும். மேலும் உங்களிடத்தில் சரியான தியாகத்திற்கான, நிரந்தர தியாகத்திற்கான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ரமலான் உண்மையான தியாகமின்றி சென்று விடுகிறதோ அது ரமலான் அல்ல; மேலும் எந்த தஹ்ரீகே ஜதீது ஆன்மாவின் புத்துணர்ச்சியின்றி சென்று விடுகிறதோ அது தஹ்ரீகே ஜதீது அல்ல. (ஜுமுஆ பேருரை 04 நவம்பர் 1938)

இது தொடர்பாக 11 நவம்பர் 1938 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீது சந்தா செலுத்துபவர்களுக்காக சிறப்பான துஆவுக்கான அறிவிப்பைச் செய்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

ரமலானின் இறுதி பத்து நாட்கள் வரவிருக்கின்றன. இவற்றை தஹ்ரீகே ஜதீது தொடர்பான முந்தைய தியாகங்களுக்கு நன்றி கூறுவதற்காகவும், இனிமேல் ஆற்றலைப் பெறுவதற்காகவும் செலவு செய்யுங்கள். எவர்களுக்கு சென்ற ஆண்டுகளில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்ததோ அவர்கள் அதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். ஒவ்வொரு துஆ செய்பவரும், ஒவ்வொரு தியாகத்தை செய்வதற்காகவும் அல்லாஹ்விடம் துஆ செய்யட்டும். அவர் மார்க்கத்தின் கம்பீரத்திற்காகவும், உறுதிப்பாட்டிற்காகவும் செய்த தியாகங்களின் விளைவாக அல்லாஹ் தனது கருணையையும், அருள்களையும் இறக்குவானாக என்றும் துஆ செய்ய வேண்டும். ஆமீன். (அல் ஃபஸல் பத்திரிகை 15 நவம்பர் 1938 – பக்கம் 4)

29 நவம்பர் 1938 ஆம் ஆண்டு காதியானிலிருந்து வெளிவந்த அல் ஃபஸல் நாளிதழின் அறிவிப்பிற்கேற்ப ஜமாஅத்தைச் சார்ந்த தூய உள்ளம் கொண்டவர்கள் தஹ்ரீகே ஜதீது திட்டத்தின் துவக்கத்திலிருந்தே எப்போதும் ரமலான் மாதத்தின் மத்திய நாட்களுக்குள் தமது தஹ்ரீகே ஜதீது சந்தா வாக்குறுதிகளை நூற்றுக்கு நூறு முழுமையாக செலுத்தி அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பதற்கு முயற்சி செய்து வந்ததை வழக்கமாக கொண்டிருந்தனர்.

இப்போது மீண்டும் ஒரு முறை வானத்தின் எண்ணற்ற அருட்கொடைகளைக் கொண்ட இந்த புனித மாதத்தில் நாம் காலெடுத்து வைக்க இருக்கிறோம். எனவே தஹ்ரீகே ஜதீதிற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களிடம் அனைவரிடமும் கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால், அவர்கள் தமது கண்ணியமிக்க ஜமாஅத்தின் மரபுகளை நிலைநாட்டியவாறு ரமலானின் 20 ஆம் நாளுக்குள் அதாவது மே 14 ஆம் தேதிக்குள் தமது சந்தாவை முழுமையாக செலுத்தி ஹுஸூர் அவர்களின் ஒப்புக் கொள்ளப்படத்தக்க துஆக்களிலிருந்து பெரும் பங்கைப் பெறும் நற்பேற்றைப் பெற வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்

அனைத்து மாவட்ட மற்றும் உள்ளூர் அமீர்மார்கள், தலைவர்கள், தஹ்ரீகே ஜதீது செயலர்கள், கொள்கை பரப்பு பிரச்சாரர்கள் ஆகியோரிடமும் கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால், அவர்கள் தத்தமது ஜமாஅத்துகளில் நூறு சதவீதம் சந்தா செலுத்துபவர்களின் பெயர்ப் பட்டியலை மே 14 ஆம் தேதிக்குள் தபால் மூலமாகவும், மே 20 ஆம் தேதிக்குள் தொலை நகல் அல்லது மின்னஞ்சல் மூலமாகவும் வகாலத்தே மால் தஹ்ரீகே ஜதீது காதியான் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும். இதன் மூலம் அனைத்து ஜமாஅத்துகளின் ஒட்டு மொத்த அட்டவணையை ரமலான் 29 ஆம் நாளில் ஹுஸூர் அவர்கள் செய்யும் கூட்டு துஆவிற்காக அனுப்பி வைக்க முடியும். ஜஸாகுமுல்லாஹ்.

வஸ்ஸலாம் எளியவன்

வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது காதியான்

### முக்கிய அறிவிப்பு

### ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு கடிதம் எழுதும் அனைத்து ஜமாஅத் சகோதர சகோதரிகளுக்கும் அறிவிக்கப்படுவதாவது: வழக்கம்போல் தங்களின் அனைத்துக் கடிதங்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்களுக்கு முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும் கொரோனா வைரஸ் தொடர்பாக இன்றைய நாட்களில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் கடிதங்களுக்கு பதில் எழுதும் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த அனைத்துக் கடிதங்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக பதில் அனுப்புவது சாத்தியமில்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்.

அல்லாஹ் கருணையும், அருளும் புரிவானாக. இந்தத் தொற்று நோய் மற்றும் ஏனைய சிரமங்கள் மற்றும் பிரச்சனைகள் மற்றும் கஷ்டங்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பானாக. அனைவரையும் தனது பாதுகாப்பிலும் அடைக்கலத்திலும் வைப்பானாக. மேலும் எப்பொழுதும் அவனது அன்பின் பார்வை உங்கள் மீது இருக்கட்டுமாக. (முனீர் அஹ்மது ஜாவீது – தனிச்செயலர்)

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

கஷ்டங்கள் மற்றும் பகைமைக்கு எதிரில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளை என்னவென்றால், அவர்கள் தமது எதிரிகள் மற்றும் எதிர்ப்பவர்களிடம் அமைதிக்கான கூற்றையே பேச வேண்டும். ஆனால் இதன் விளைவு என்ன நேர்ந்தது என்றால், முஸ்லிம்கள் ஏளனத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள். பொய்ப்படுத்தப்பட்டார்கள். அவப்பெயருக்கு ஆளாக்கப்பட்டார்கள். இருப்பினும், முஸ்லிம்கள் இறைவனது கட்டளைக்கேற்ப பொறுமையை மேற்கொண்டார்கள்.

மேலும் முஸ்லிம்கள் தமக்காக விரும்பிய சமாதானத்தையே எதிரிகளுடனும் விரும்பினர். அந்த அமைதியானது தற்காலிகமானதாக இருக்கவில்லை. மாறாக, நிரந்தரமான அமைதியாக இருந்தது.

எனவேதான் யூனுஸ் அதிகாரத்தில் 26 வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: அல்லாஹ் அமைதியின் இல்லத்திற்கு அழைக்கின்றான்.

இந்த வசனம் தெளிவுபடுத்துவது என்னவென்றால், நிரந்தரமான அமைதியை ஏற்படுத்துவதற்கும், மக்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கும் முஸ்லிம்கள் எப்போதும் எல்லா வகையிலும் முயற்சி செய்ய வேண்டும். இருப்பினும் பல ஆண்டுகள் வரை (முஸ்லிம்களுக்கு) துன்பத்தை எதிர்கொள்ள வேண்டியது வந்தது. இந்த துன்பமானது தனது எல்லையை உச்சத்தை அடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களது சஹாபாக்களும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றனர்.

ஹிஜ்ரத் செய்யப்பட்ட பிறகும் கூட இஸ்லாத்தின் எதிரிகள் அவர்கள் அமைதியுடன் வாழ விடவில்லை. அவர்கள் மீது போரை திணித்தார்கள். பல ஆண்டுகளாக அநீதியை பொறுத்துக் கொண்டர்கள், தமது வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பிறகு அல்லாஹ் தற்காத்துக் கொள்வதற்காக முழு ஆற்றலுடன் பதிலடி கொடுப்பதற்கு அனுமதி வழங்கினான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இங்கு இவ்விஷயம் கவனிக்கத்தக்கதாகும். அதாவது பதிலடிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதிகூட, இஸ்லாத்தையோ அல்லது முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காகவோ வழங்கப்படவில்லை. மாறாக, திருக்குர்ஆனின் அல்ஹஜ் அதிகாரத்தின் 41 வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். தற்காப்பு போர் செய்வதற்கான அனுமதி கூட அனைத்து மார்க்கங்களின் பாதுகாப்பிற்காகவும், உலகளாவிய மார்க்க சுதந்திரத்திற்காகவும் வழங்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை பின்பற்றுபவர்களிடம் இந்த விஷயத்தை கடுமையாக பின்பற்றி நடக்குமாறு வழிகாட்டினார்கள்.

உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். அதாவது போர் கைதிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். சாத்தியக்கூறு இருப்பின் அவர்களை விடுதலை செய்து விட வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த வழிகாட்டலையும் வழங்கினார்கள்: அதாவது எந்த குழந்தையையோ, எந்த பெண்ணையோ, எந்த முதியவரையோ அல்லது நேயாளியையோ கஷ்டப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு துன்பத்தை தரக்கூடாது. மேலும் எந்த வணக்கஸ்தலத்தையும் சேதப்படுத்தக்கூடாது. மேலும் மார்க்கத் தலைவர்களை கொலை செய்யக் கூடாது.

மேலும் இந்த அறிவுரையையும் வழங்கினார்கள்: அதாவது அமைதியை நிலைநாட்டுவதில் எந்த சந்தர்ப்பமும் கையை விட்டு நழுவி விடக்கூடாது என்பதற்காக எதிரி படையினர் சமாதானம் செய்து கொள்வதன் பக்கம் சைகை செய்தாலும் கூட உடனடியாக அவர்களிடம் சமாதானம் செய்து கொள்வதற்கு முன் வர வேண்டும்.

மேலும் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், முஸ்லிம்களை போர் விரும்பிகள் என்றும் கொலைகாரர்கள் என்றும் கூறப்பட்டு வந்தது. ஆனால் இன்று மேற்கத்திய மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள், இக்கருத்தானது முற்றிலும் உண்மைக்கு மாற்றமானதாகும் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

உண்மையில் ஆய்வின் அடிப்படையில் தெரிய வருவது என்னவென்றால், இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் செய்யப்பட்ட அனைத்துப் போர்களிலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை, இன்றைய நாட்களின் ஒரு குண்டினால் மரணிக்கின்றவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் அது மிகக்குறைவே ஆகும்.

எனவே பகைமையின் விதையை நட்டுவதற்கு பதிலாக இஸ்லாம் எப்போதும் பகைமையின் சுவரை இடிப்பதற்கும், அன்பு மற்றும் பரிவின் பாலத்தை கட்டுவதற்கும் அறிவுறுத்தியே வந்துள்ளது. மனித இனம் பல்வேறு பிரிவுகளாக பிரிக்கப்படுவதற்கு பகரமாக அவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நோக்கமாகும். ஆக சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும், மேலும் பல்வேறு பிரிவைச் சார்ந்த மக்கள் வரை அமைதியை பரப்புவது முஸ்லிம்களின் பொறுப்பாகும். அது அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கான அடிப்படையான காரணத்தை நான் முன்னரே கூறி விட்டேன். திருக்குர்ஆனில் முதல் அதிகாரத்திலேயே அது எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அது என்னவென்றால், எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது.

எவ்வாறு இறைவன் மனித இனத்தை படைத்து அதை நிலைத்திருக்கச் செய்யக் கூடியவனாக இருக்கின்றானோ அதேபோன்று ஒரு உண்மையான முஸ்லிமும் தன்னைப் போன்ற மனித இனத்துடன் காழ்ப்புணர்ச்சியும், பகைமையும் கொள்ளக் கூடாது. இது ஒரு உண்மையான முஸ்லிமிற்கு அழகல்ல. மாறாக, நமது பகைமையானது அன்பினாலும், பரிவினாலும், ஒருவர் மற்றொருவருடனான அனுதாபத்தினாலும்தான் விலக முடியும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒரு செயல் ரீதியான முஸ்லிமாக இருப்பதால் நமக்கு சில மார்க்க கொள்கைகள் இருக்கின்றன. இறைவன் ஒருவன் என்பது நமது கொள்கையாகும். நாம் அவனுக்கு முன்னால் குனிவதும், அவனையே வணங்குவதும் நமது கடமையாகும். அதேபோன்று நாம் திருக்குர்ஆனின் நிலைத்திருக்கக்கூடிய போதனையான, மார்க்கத்தில் எவ்வித

## திருக்குர்ஆனிலிருந்து...

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு (முடிவு) காலம் குறிக்கப்பட்டு உள்ளது. எனவே அவர்களின் காலம் வந்து விட்டால், அவர்களால் அதிலிருந்து ஒரு நொடிப்பொழுதும் பின் தங்கவோ முந்தவோ முடியாது. (7:35)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

பலவந்தமும் இல்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். நான் இதற்கு முன்பும் கூறியுள்ளேன். அதாவது மார்க்கம் எப்போதும் ஒரு மனிதனின் தனிப்பட்ட விவகாரமாகவே இருந்துள்ளது. மேலும் அவ்வாறே இருக்கவும் செய்யும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் என்பதன் சொற்பொருள் சாந்தி என்பதாகும். மேலும் திருக்குர்ஆனில் இப்படிப்பட்ட பல வசனங்கள் இருக்கின்றன. அவை படிப்படியாக நமக்கு தெரிவிப்பது என்னவென்றால், முஸ்லிம்கள் எப்போதும் அமைதியுடன் வாழ வேண்டும். மேலும் மற்றவர்களுடன் அன்புடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இத்தகைய அமைதி நிறைந்த போதனை அருளப்பட்டிருக்கும் போது, அன்னார் இந்த போதனைகளுக்கு மாற்றமாக செயல்பட்டார்கள்? இது எவ்வாறு சாத்தியமாகும்?

எழுத்தாளர்களும், வரலாற்று ஆசிரியர்களும் இந்த விஷயத்திற்கு சாட்சி பகர்கின்றனர். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் அநீதியிழைத்தது கிடையாது. மேலும் ஒருபோதும் எவரது உரிமையையும் பறித்தது கிடையாது. மாறாக, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அமைதி, சகோதரத்துவம் மற்றும் மற்றவர்களின் உரிமையை செலுத்துவதன் பக்கமே போதனை வழங்கி வந்தார்கள்.

நிச்சயமாக அன்னாரது இந்த போதனையே எங்களது ஈமான் ஆகும். மேலும் நாங்கள் பெருமிதத்துடன் இந்த ரஸூலின் உம்மத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றோம் என்று வாதம் செய்கின்றோம். அவரைப் பற்றி, அவர் உலகத்திற்கே அருட்கொடையாவார் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. மேலும் இதன் காரணமாகத்தான், எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற முழக்கத்தை அஹ்மதிய்யா ஜமாஅத் செய்கின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் முழு மனித இனமும் எந்த விஷயத்திற்காக முயற்சி செய்ய வேண்டுமென்றால், அது அமைதி ஆகும்.

இஸ்லாத்தின் எதிரிகள், இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக விஷத்தை கக்குவதற்கு பகரமாக, தமது பகைமை மற்றும் சுயநலத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இல்லையென்றால் உலகத்தில் பிரச்சனை அதிகரித்துக் கொண்டே செல்லும். மேலும் தமது போதனைகளைப் பற்றி சரியான முறையில் அறிவைப் பெற்றிராத கல்வி அறிவு இல்லாத மற்றும் அறிவு இல்லாத முஸ்லிம்களின் துக்கம் மற்றும் கோபம் மிகவும் அதிகமாகி விடும்.

இளைஞர்கள் நிராசையின் நிலையை அடையும்போது அவர்கள் பகைமையினால் நிரப்பி இருக்கின்ற முல்லாக்களுக்கு எளிதாக இலக்காகி விடுவார்கள். பிறகு அவர்கள் இவர்களின் சிந்தனையில் விஷத்தை நிரப்புகின்றனர்.

நீங்கள் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால், உலகத்தை இருளில் ஆழ்த்தி இருக்கின்ற பகைமையின் இந்த எல்லை முஸ்லிம்களுக்கிடையில் அமைதியை அழித்து விடும். மேலும் முழு உலகிலும் அமைதியை நிலைநாட்டுவது ஒரு கனவாகவே இருந்து விடும்.

நான் கூறியதுபோன்று, இது காலத்தின் தேவையாகும். நாம் அனைவரும் இணைந்து ஒருவர் மற்றவரின் மார்க்க உணர்வுகளை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் நாம் நமது வருங்கால சந்ததிகளுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தித் தருவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: வாருங்கள். நாம் நமக்கிடையிலான பிரிவினையை ஒரு புறம் வைத்து விட்டு சமூகத்தில் ஒரு உண்மையான மற்றும் நீண்ட காலம் நிலைத்திருக்கும் வகையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக முயற்சி செய்வோம். மேலும் ஒற்றுமை மற்றும் நன்மைகளின் அடிப்படையில் சமூகத்திற்கான அடித்தளத்தை அமைப்போம். அல்லாஹ் நமக்கு இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. உங்களுக்கு நன்றி.

ஹுஸூர் அவர்களின் இந்த சொற்பொழிவு 5:30 வரை நீடித்தது. இறுதியில் ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்.

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு சென்று விட்டார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 6:15 ஹுஸூர் அவர்கள் திடலுக்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்களுடன் இணைந்து அனைத்து விருந்தினர்களும் உணவு உண்டனர். உணவு உண்ட பிறகு விருந்தினர்களில் ஒவ்வொருவராக ஹுஸூர் அவர்களிடம் வந்து தனது அறிமுகத்தை செய்து கொண்டார்கள். மேலும் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான நற்பேற்றையும் பெற்றார்கள். ஹுஸூர் அவர்களும் மிகுந்த பரிவுடன் விருந்தினர்களுடன் உரையாடினார்கள்.

அஹ்மதியல்லாத விருந்தினர்களுடனான இந்த நிகழ்ச்சி 7 மணி வரை நீடித்தது. இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் திடலுக்கு சென்றபோது ஐவெரிகோஸ்ட்டிலிருந்து வந்திருந்த ஓர் அஹ்மதி இளைஞருக்கு ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. அந்த இளைஞர் ஐவெரிகோஸ்ட்டிலுள்ள Idrissa Kone லிருந்து Pilot படிப்பிற்காகவும், Training ற்காகவும் ஒரு வருடத்திற்காக பெல்ஜியம் வந்திருந்தார்.

ஹுஸூர் அவர்கள் அவரிடம், நீங்கள் எந்த Air Line ல் பணி புரிகின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர், Air Cote Dlvore ற்காக நான் பணி செய்கின்றேன் என்று கூறினார். மேலும் அவர் ஆப்ரிக்கா நாடுகளில் விமானத்தை ஓட்டுவதாகவும் தெரிவித்தார்.

நீங்கள் பிறப்பால் அஹ்மதிய்யா என்று ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், சில வருடங்களுக்கு முன்பு பைஅத் செய்ததாக கூறினார். பிறகு அவர் ஹுஸூர் அவர்களிடம் துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு ஹுஸூர் அவர்கள், அல்லாஹ் உங்களுக்கு வெற்றியை வழங்குவானாக என்று கூறினார்கள்.

அதற்குப் பிறகு அவர் கூறினார்: நான் ஹுஸூர் அவர்களின் துஆவின் காரணமாகவே Pilot ஆக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன்.

## திருக்குர்ஆனிலிருந்து...

ஒரு பிரிவினருக்கு அவன் நேர்வழியினை வழங்கினான். ஆனால் மற்றொரு பிரிவினர்க்கோ தவறான வழியில் செல்லுவது உரித்தாகி விட்டது. (ஏனென்றால்) அவர்கள் அல்லாஹ்வை விட்டு விட்டு ஷைத்தான்களைத் தங்கள் நண்பர்களாக்கிக் கொண்டு தாங்கள் நேர்வழியினைப் பெற்று விட்டோம் என்று நினைத்துக் கொள்கின்றனர். (7:31)

M.Y. Shahul Hameed, Melapalayam

அந்த சம்பவம் இவ்வாறாகும். அதாவது அந்த இளைஞர் சில ஆண்டுகளுக்கு முன்பாக ஐவெரிகோஸ்ட் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார். அப்போது அங்கு அவரது நண்பர் அவரிடம் கூறினார். நான் ஒரு அறிவிப்பை பார்த்தேன். அதில் Air lvory Coast நிறுவனமானது தமது பணிக்காக வேலையாட்களை தேர்வு செய்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் File ஐ சமர்ப்பிக்கக்கூடிய நேரம் கடந்து விட்டது.

அந்த இளைஞர் கூறுகின்றார்: தேதி கடந்திருந்தாலும் நான் ஹுஸூர் அவர்களிடம் துஆவிற்காக எழுதினேன். அத்துடன் எனது File ஐயும் சமர்ப்பித்தேன்.

சிறிது நாட்களுக்குப் பிறகு அந்த இளைஞருக்கு பதில் வந்தது. அதில், நீங்கள் File ஐ காலதாமதமாக சமர்ப்பித்திருந்தாலும் உங்களுக்கு தேர்வில் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பிறகு அவர்கள் எழுத்துத் தேர்வை எழுதினார்கள். ஆயிரம் நபர்களில் வெறும் 15 நபர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதில் இவர்களது பெயரும் இடம் பெற்றிருந்தது.

அந்த இளைஞர் கூறுகின்றார்: இவை அனைத்து ஹுஸூர் அவர்களின் துஆவின் விளைவே ஆகும்.

மேலும் அவர் கூறுகின்றார்: நான் MTA வில் ஹுஸூர் அவர்களைப் பார்த்துள்ளேன். ஆனால் எனது வாழ்க்கையில் முதல் முறையாக எனது கண்களால் ஹுஸூர் அவர்களது எனது அருகில் பார்த்தேன். மேலும் ஹுஸூர் அவர்களுடன் உரையாடினேன். ஹுஸூர் அவர்கள் நீண்ட நேரம் வரை எனது கைகளைப் பற்றிப் பிடித்திருந்தார்கள். இன்று நான் எத்தகைய நற்பேறு பெற்றவன் என்றால் இந்த தருணத்தை எனது வாழ்க்கையில் என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தனது அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள். அலுவலக கடிதங்கள் மற்றும் அறிக்கைகளை பார்வையிட்டார்கள். மேலும் வழிகாட்டல் வழங்கினார்கள்.

8 மணிக்கு ஹுஸூர் அவர்கள் ஆண்கள் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு வருகை தந்தார்கள்.

**ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவைக் செவியுற்ற விருந்தினர்களின் நற்தாக்கங்கள்**

ஹுஸூர் அவர்கள் இன்றைய சொற்பொழிவு முஸ்லிம் அல்லாத மற்றும் ஜமாஅத்தைச் சாராத விருந்தினர்களின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சில விருந்தினர்களால் தனது உணர்வுகளையும், நற்தாக்கங்களையும் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

♦ Nunspeet ன் கவுன்சிலரான Gert Van Den Berg என்ற ஒரு விருந்தினர் தனது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: சில காலங்களுக்கு முன்பாக நான் இங்கு வருவதையே விரும்பாதவனாக இருந்தேன். ஆனால் இப்போது நமது தொடர்புகள் மிகவும் சிறந்ததாக இருக்கின்றது. கலீஃபா அவர்கள் Nunspeet வருகை தந்தபோது நான் அவர்களை வரவேற்கவும் செய்தேன். நான் கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்க மீண்டும் வர விரும்பினேன். நான் கலீஃபாவின் சொற்பொழிவினால் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். உங்கள் அனைவரிடமும் ஓர் ஆழமான உறவு இருப்பதைப் போன்று உணர்கின்றேன். நீங்கள் சமூகத்தில் செயல் துடிப்புள்ள ஓர் அங்கமாவீர்கள். எனவே இங்கு வருவதற்கு உள்ளம் விரும்புகின்றது.

♦ Rotter Dam என்ற இடத்திலிருந்து வந்திருந்த Erik Jan Klijn என்ற விருந்தினர் கூறினார்:

உங்களது மாநாடு மிகவும் அமைதி நிறைந்ததாக இருந்தது. கலீஃபா அவர்களின் கூற்றில் எனக்கு மிகவும் பிடித்திருந்த விஷயம் என்னவென்றால், ஹுஸூர் அவர்கள் மனிதர்களின் உரிமைகள் பற்றி பேசினார்கள். மேலும் மக்களை அமைதி மற்றும் சாந்தியின் பக்கம் அழைத்தார்கள்.

♦ Rotter Dam என்ற இடத்திலிருந்து வந்திருந்த Herman Mee Ter என்ற மற்றொரு விருந்தினர் தமது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: மாநாட்டிற்கு வருவதற்கு முன்பாக நான் பதற்றமடைந்திருந்தேன். ஏனென்றால் இந்த மாநாட்டில் முஸ்லிம்கள் ஒன்று கூடுகின்றனர். என்ன நடக்கும்? என்பது தெரியாது. ஆனால் இங்கு வந்து எனக்கு வியப்பு ஏற்பட்டது. இங்கு அமைதியைப் பற்றி பேசப்படுகிறது. கலீஃபா அவர்கள் கூறியதில் எனக்கு மிகவும் பிடித்த விஷயம் என்னவென்றால், கலீஃபா அவர்கள் மிகவும் தைரியமாக பேசினார்கள். போப் அவர்கள் பொதுவாக அமைதியைப் பற்றி பேசுவார்கள். ஆனால் உங்களது கலீஃபா வெளிப்படையாக ஆற்றல் படைத்த சமுதாயங்களை சுட்டிக் காட்டி பேசினார்கள்.

♦ Christna என்ற பெண்மணி கூறுகின்றார்: ஜமாஅத்தை ஒரு நீண்ட காலமாக அறிந்துள்ளேன். இந்த ஜமாஅத்திற்கு விருந்தினர்களுடன் ஒரு குறிப்பான தொடர்பு இருக்கின்றது. ஜமாஅத்தின் வழிகாட்டி சிறந்தவர் ஆவார்கள். எனவே ஜமாஅத்தும் சிறந்ததாக இருக்கின்றது. ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. காலத்தின் கலீஃபா அவர்கள் ஒவ்வொரு விஷயத்தை வெளிப்படையாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினார்கள். கலீஃபா அவர்கள் எதைப் பற்றியெல்லாம் பேசினார்களோ அவை அனைத்தும் காலத்தின் தேவைக்கேற்ப மிகவும் அவசியமாகும்.

(உருது பத்ர், 31 அக்டோபர் & 7 நவம்பர் 2019 – தொடரும்...)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

**திருக்குர்ஆனிலிருந்து...**

ஆதமின் மக்களே! ஒவ்வொரு வணக்கத்தலத்திடத்தும் நீங்கள் அழகை மேற்கொள்ளுங்கள். உண்ணுங்கள்; பருகுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனென்றால் அவன் வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (7:32)

A.Basheer Ahmad, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 14 May 2020 Issue No. 20

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

இஸ்லாத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டபோது முஸ்லிம்கள் மக்காவில் அநீதிக்கு ஆளானார்கள். சிலர் கருணையற்ற முறையில் கொலை செய்யப்பட்டனர். சிலர் மீது காட்டுமிராண்டித்தனமாக அநீதிகள் இழைக்கப்பட்டது. ஆனால் முஸ்லிம்கள் பொறுமையை மேற்கொண்டார்கள். மேலும் ஒருபோதும் பழிவாங்கியது கிடையாது. எல்லா வகையிலும் அநீதிகளை பொறுத்துக் கொண்ட பிறகு சில பலவீனமான முஸ்லிம்கள் ஓர் இடத்திற்கு ஹிஜ்ரத் செய்து சென்றனர். அந்த இடம் இன்றைய நாட்களில் எத்தியோப்பியா என்ற பெயரால் அறியப்படுகிறது.

இதற்குப் பிறகும் கூட இஸ்லாத்தின் எதிரிகள் முஸ்லிம்களை அமைதியுடன் வாழ விடவில்லை. மாறாக, அவர்களைப் பின்தொடர்ந்தவாறு அந்த இடத்தின் அரசனை சென்றடைந்தார்கள். மேலும் அரசனிடம், முஸ்லிம்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றும்படியும், இவர்கள் மீது மக்காவில் அநீதி இழைக்கப்படுவதற்காக இவர்களை வலுக்கட்டாயமாக மக்காவிற்கு திருப்பி அனுப்புமாறும் இவ்வாறு இஸ்லாம் பரவக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

மக்கத்து காஃபிர்கள் அரசனிடம், முஸ்லிம்கள் ஒரு புதிய கொள்கைளை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் அவர்கள் சில வணக்கத்தை தீயது என்று கூறுகின்றனர் என்று கூறினர். மேலும் முஸ்லிம்கள் குழப்பத்தை பரப்புகின்றனர். மேலும் சமூகத்தில் அமைதியை சீர்குலைக்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டினர்.

இதற்குப் பிறகு அரசர் (முஸ்லிம்களிடம்) இதுபற்றி கேட்டார். அதற்கு முஸ்லிம்கள், அனைத்து படைப்பினங்களையும் படைத்த ஏக இறைவனின் மீது ஈமான் கொண்டுள்ளதை வெளிப்படுத்தினர். அதாவது, நாங்கள் அந்த இறைவனையே வணங்குகின்றோம். அவன் அனைத்து சமுதாயங்களுக்கிடையிலும் அமைதியை விரும்பக் கூடியவனாக இருக்கின்றான் என்று கூறினர்.

மேலும் அவர்கள் கூறினர்: நாங்கள் இவ்விஷயத்தின் மீதும் நம்பிக்கை கொள்கின்றோம். அதாவது பல்வேறு மார்க்கத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் கொள்கையை கொண்டிருப்பவர்கள் ஒருவர் மற்றவர்களுக்கு கண்ணியம் வழங்க வேண்டும். செல்வந்தர்கள், ஆற்றல் படைத்தவர்கள் ஆகியோருக்கு பலவீனமான மக்களின் உரிமைகளை பறிப்பதற்கு உரிமை வழங்கப்படக் கூடாது. மேலும் ஏழைகளும் செல்வந்தர்கள் மீது பகைமை கொள்ளக்கூடாது.

பிறகு அரசர் (மக்கத்து காஃபிர்களிடம்) கேட்டார்: முஸ்லிம்கள் போரை ஆரம்பம் செய்தார்களா? எப்போதாவது பொய் பேசியுள்ளார்களா? எப்போதாவது வாக்குறுதியை மீறியுள்ளார்களா? அல்லது எப்போதாவது கிளர்ச்சி செய்வதற்கு தூண்டியுள்ளார்களா?

(மக்கத்துவாசிகளுக்கு) முஸ்லிம்கள் இந்த அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் தூய்மையானவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமல் ஆயிற்று.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரை பின்பற்றுவர்கள் மீதும் கடுமையான பகைமையை கொண்டிருந்தபோதிலும் மேலும் இஸ்லாத்தை அழிப்பதற்கான ஆசை அவர்களது உள்ளத்தில் இருந்தபோதிலும் மக்கா வாசிகள் இவ்வாறு சாட்சி கூறினர். அதாவது இஸ்லாத்தின் தோற்றுநர் ஒருபோதும் பொய்யான விஷயங்களை கூறியது கிடையாது. ஒருபோதும் வாக்குறுதியை மீறியது கிடையாது. ஒருபோதும் அநீதியான முறையில் நடந்து கொண்டது கிடையாது.

மேலும் அவர்கள் (மக்கத்துவாசிகள்) இவ்விஷயத்தையும் ஏற்றுக் கொள்ளும் நிர்பந்தத்திற்கு ஆளாகினர். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களை பின்பற்றுபவர்களும் சமூகத்தில் அன்பையும், நேசத்தையும் நிலைநாட்ட விரும்புகின்றனர். மேலும் ஏகத்துவத்தை அமைதியான முறையில் பிரச்சாரம் செய்கின்றனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடுமையான எதிர்ப்பின் நிலையிலும் பொறுமையையே மேற்கொண்டார்கள். தனது துன்பத்தை இறைவனின் முன்னிலையில் சமர்ப்பித்தார்கள்.

திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளது. அதாவது நான் மக்களை அமைதியின் பக்கமும் நேர்வழியின் பக்கமும் அழைத்தேன். ஆனால் அவர்கள் அநீதியான நடைமுறையை வெளிப்படுத்தினார்கள்.

மக்காவில் வசித்து வந்தபோது எதிரிகளின் எதிர்ப்புக்கு பிறகும்கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஸ்லிம்கள் மீது அநீதியிழைக்கக்கூடியவர்களுக்கு எதிராக வாள் ஏந்தியது கிடையாது. மேலும் மக்கத்து அமைப்பாளர்களுக்கு வழங்க வேண்டிய ஒத்துழைப்பிலும் குறை வைத்தது கிடையாது. அல்லது எவ்வித கிளர்ச்சி செய்வதற்கும் தூண்டியது கிடையாது.

முஸ்லிம்கள் மேற்கொண்ட இந்த பொறுமை அல்லாஹ் திருக்குர்ஆனில் சூரா ஃபுர்கானின் 64 வது வசனத்தில் கூறப்பட்டதற்கேற்ப இருந்தது. அந்த வசனத்தில் அல்லாஹ் நம்பிக்கையாளர்களைப் பார்த்து கூறுகின்றான்: அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னின் (உண்மையான) அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள். அறிவற்றவர்கள் அவர்களுடன் (அறிவீனமாகப்) பேசினால் அவர்கள் சாந்தி எனக் கூறி(ச் சென்று) விடுவார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம்களுக்கு எத்தகைய துன்பம் ஏற்பட்டாலும் அல்லது அவமானம் ஏற்பட்டாலும் பொறுமையை மேற்கொள்ளுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad